# விடுதலைப் போரில் ஒரு தாய்

ஆரம்ப காலத்தில் எமது விடுதலைப் போராட்டம், தலைமறைவுப் போராட்டமாக இருந்து, பின்னர் கெரில்லாப் போராட்டமாக மாறி, இப்போது மரபு வழிப் போராக மாறியுள்ளது. ஆனால் ஒன்று மட்டும் மாறவில்லை . அதுதான் மக்களின் ஆதரவு எனும் மாபெரும் சக்தி . ஆனால் மக்கள் தமது ஆதரவை களத்திலே நேரடியாக காட்டியது , ஆனையிறவுப் போரின் போது தான் . போரில் காயமடைந்த போராளிகள் அலறித் துடிக்கும் போது எம்மால் வீட்டில் சும்மாயிருக்க முடியாது என்று சொல்லி வைத்தியசாலையில் தொண்டாற்ற வந்த அன்னையர்களில் ஒருவர்தான் திருமதி சிவக்கொழுந்து அவர்கள்.

எப்போது போனாலும் வைத்தியசாலை வார்ட்டுகளில் இவரைக் காணலாம் . ஒரு பெண் தனது வீட்டுக் கடமைகளை விட்டு நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நாள் முழுதும் சேவை செய்யத் தயாராக இருக்கின்றாள் என்றால் , அந்தப் பெண்ணின் சமூக உணர்வையும் , பரந்த மனப்பான்மையையும் நாம்சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

விடுதலைப் போரில் பெண்களின் பங்களிப்பு மிக மிகக் குறைவாக இருந்த காலம்அது . முல்லைத் தீவைப் பொறுத்தளவில் மக்கள் எமது விடுதலைப் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரிக்க அஞ்சிய நேரம். அந்த வேளையிலும் சிலர் துணிவுடன் எமக்கு ஆதரவாகச் செயல்பட்டனர். எமது போரட்டத்தின் நியாயத்தைப் புரிந்துகொண்டு. - எமக்கு படிப்படியாக முல்லைத் தீவில் ஆதரவைத் தேடித்தந்தார்கள். அந்தச்சிலரில் திருமதி சிவக்கொழுந்து அவர்களும் ஒருவர்.

இலங்கை அரசினதும் , இராணுவத்தினதும் மனித உரிமை மீறல்களை எதிர்ப்பதற்காக தமிழீழமெங்கும் அன்னையர்முன்னணி தோற்றம் பெற்றபோது. - முல்லைத்தீவில் திரண்டெழுந்த அன்னையரை வழி நடத்திச் செல்லும் பொறுப்பை இவர் ஏற்றார் .

1987-இல் லெப் கேணல் தீலீபனுக்கு ஆதரவாக முல்லைத்தீவில் திருச்செல்வம் உண்ணா விரதமிருந்து கொண்டிருந்த போது முல்லைத்தீவு மக்களெல்லோரும் அங்குள்ள இலங்கை இராணுவ முகாமைத் தொடர்ந்து ஒரு வாரத்துக்கும் மேலாக மறியலில் வைத்திருந்தனர். கிளர்ந்தெழுந்த மக்களோடு இணைந்து திருமதி சிவக்கொழுந்து அவர்களும் அந்த மறியல் போரில் கலந்துகொண்டார்.

மணலாறு காட்டுப் பகுதிக்குள் எங்கள் தலைவர் மறைந்திருப்பதாகக் சந்தேகித்த இந்திய இராணுவம், காட்டுக்குள்ளே வாழ்பவர்களுக்கும் மக்களின் குடிமனைகளுக்கும் இருக்கக்கூடிய தொடர்பைத் துண்டிக்கு முகமாக அளம்பிலிலும் செம்மலையிலும் இருமுகாம்களை அமைத்தது. மேலும் காட்டுப் பகுதிக்கு உணவுகள் போகாவண்ணம் மணலாறுப் பிரதேசத்தின் மீது பொருதாரத் தடையை விதித்தது. அத்துடன் தொடராக 27 நாட்கள் கடும் ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்தது. தம்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை எதிர்த்து முல்லைத் தீவு மக்கள் அணி திரண்டனர். "இந்தியஇராணுவமே வெளியேறு", உட்படப் பல கோசங்களுடன் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை மிலேச்சப் படை ஒன்றின் ஊரடங்கு உத்தரவையும் மீறி நடத்தி முடித்தனர். இந்திய இராணுவத்தினரின் காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகளின் மத்தியிலும் ஒரு பெண்கள் அமைப்பு, பெரும் ஊர்வலத்தை நடத்தி, இந்திய முகாம் பொறுப்பதிகாரிகளுடன் வாதிட்டு தமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது என்றால், அந்தப் பெண்கள் தம் நலனை விட , நாட்டு மக்களின் நல்வாழ்வை எவ்வளவு தூரம் நேசித்தார்கள் என்பது எமக்கு விளங்கும். இந்திய இராணுவத்தினருக்கு ஈழத்து அன்னையரின் மனஉறுதியைக் காட்டிய சம்பவங்களுள் ஒன்றான இதில், திருமதி சிவக்கொழுந்து அவர்களின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

சென்ற வருடம் பேரெழுச்சியுடன் விடுதலைப் புலிகள் நடத்திய முத்தமிழ் விழாவின் போது ஒழுங்குகளைக் கவனிக்கும் பணியைச் செய்வதற்காக, முல்லைத்தீவிலிருந்து வந்த அன்னையர்களில் இவரும் ஒருவர்.

ஆனையிறவு மோதல் ஆரம்பமான போதும்கூட, காயமடைந்த போரளிகளைப் பராமரிக்கும் நோக்குடன் முல்லைத்தீவிலிருந்து அன்னையர் குழு ஒன்று வந்தபோது தனது சுகயீனமான உடல்நிலையையும் பொருட்படுத்தாது, திருமதி சிவக்கொழுந்து அவர்களும் புறப்பட்டு வந்துவிட்டார். வரும்போது பூநகரிப் படகுத்துறையாலேயே வரவேண்டி இருந்தது. அப்போது அவர் "போகும் போதுதான் இந்தப் பாதை ஆனால் வரும் போது ஆனையிறவுப் பாதையால் வரலாம்" என்று சொல்லியவாறு உற்சாகமாகவே வந்தார்.

இரத்த அழுத்தமும் மார்புப் புற்று நோயும் தம்மைப் துன்புறுத்தியதையும் பொருட்படுத்தாது, காயமடைந்து வருகின்ற போராளிகளைப் பராமரிக்க வேண்டும் என்பதற்காகவே அவர் தன்னை வருத்திக் கொண்டார். இவரது நோயைப் பார்த்த நாம் இவரைத் திரும்பிப் போகுமாறு கூறியபோதும், மறுத்து விட்டார். ஆனையிறவு மோதல் முடிவடைந்து 2 வாரங்களின் பின்னரேயே, அதுவும் மிகுந்த மனவருத்தத்து டனேயே, "திரும்பிப் போகும் போது ஆனையிறவு வழியாகப் போகலாம்" என்று நினைத்தேன். ஆனால் எவ்வளவோ இளம் உயிர்களைப் பறிகொடுத்து விட்டுப் போகின்றோம்" என்று சொல்லியவாறு போனார்.



ஊருக்குத் திரும்பியதும் அவரது நோய் அவரைப் பலமாக வருத்தியது. இறுதியில் அவர் தனது நோய்க்குப் பலியாகி விட்டார்.

இந்த உயர்ந்த அன்னைக்கு அனைத்துத் தமிழீழப் பெண்களின் சார்பிலும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம். ■

---

## பன்முகப்பட்ட ....

புதுப் பொலிவுடன் வெளிவரத் தொடங்கின. இவற்றில் உலகத் தமிழர் ஆறாயிரம் (6000) அச்சிடப்பட்டு விற்பனையாவது. எரிமலையும், களத்திலும் தலா எண்ணாயிரம் (8000) பிரதிகளும் குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகளின் கவனத்தை எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் பக்கம் ஈர்ப்பதற்காக பல முயற்சிகளை கிட்டண்ணா முன்னெடுத்தார். எமது விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி, தமிழீழ மக்களின் மீது இந்திய, சிறிலங்கா அரசு கட்டவிழ்த்து விட்ட அராஜகம், தமிழீழத்தின் வளங்கள், இயற்கைக்காட்சிகள், எமது மக்களினது கலை, பண்பாடுகள், பொருளாதார வாழ்வு போன்ற இன்னோரன்னவற்றை ஓவியங்களாகவும், புகைப்படங்களாகவும் கொண்டு பல்வேறு நாடுகளில் ஓவியக்கண்காட்சி, புகைப்படக்கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்தினார். ஆங்கிலம், பிரெஞ்சு, டொச் லற்றின், நோர்வேஜியன் டானிஸ் ஆகிய சர்வதேச மொழிகளில் விடுதலைப் போராட்டம்பற்றியும், கள நிகழ்வுகள் பற்றியும் துண்டுப்பிரசுரங்களாகவும், சிறு சிறு கைநூல்களாகவும் ஏராளமாக வெளியிட்டார். பிரெஞ் மொழியில் "தமிழ்" (Tamule) என்ற சிறு ஏட்டையும், டொச்சில் "வணக்கம்" என்ற சஞ்சிகையையும் நோர்வேஜிய மொழியில் "தமிழ் ஈழம்" எனும் ஏட்டையும் தொடர்ந்து வெளிவரச் செய்தார்.

"பேப்பர் விற்கப் போனால் சனங்களொண்டும் பேப்பர் வேண்டுதில்லை. ஆனால் அவையளின்ரை வீடுகளில் போய்ப்பார்த்தால் ரீ.வீ யென்ன, டெக்கென்ன, சாமான்கள் எண்டால் குவிஞ்சு போய்க் கிடக்கும்" என்று வெளிநாட்டுக் கிளையொன்றில் பணியாற்றும் உறுப்பினர் ஒருவர் கிட்டண்ணாவிடம் குறை சொல்வது போல் கூறினார். கிட்டண்ணாவுக்கு கோபம் வந்து விட்டது. "இவ்வளவு சாமான்களையும் எங்கட சனங்கள் வைத்து அனுபவிக்கினம் என்றுதான் நாங்கள் சந்தோசப் படவேண்டும்" என்று கோபமாகக் கூறியவர், "ஒருநாளும் எங்கட சனங்களைப் பேசக் கூடாது. நீ உன்ரை திறமையைக் காட்டிப் பேப்பரை விற்கப் பார். சனங்களை மட்டும் குறை சொல்லாதே" என்றார். இச்சம்பவம் நடந்தது வெளிநாடொன்றில்.

இப்படித்தான் ஒரு முறை மடு அகதி முகாமில் வாழும் மக்களின் வாழ்க்கைமுறை பற்றி விமர்ச்சித்து இங்கு வெளிவரும் சஞ்சிகையொன்றில் கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது. அதனைப் பார்த்த கிட்டண்ணாவிற்குப் பொறுக்கவில்லை. உடனடியாக அக்கட்டுரையினை விமர்சனம் செய்து பின்வருமாறு எழுதினார்.

"அக்கட்டுரையைப் படித்தவுடன் என் நெஞ்சு பொறுக்கவில்லை. இதே சனத்திக்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்காகவும் தான் நாம் போராடுகின்றோம். அவர்களும் எம்முடைய சனங்கள். தலைவர் பார்த்தால் பொறுத்திருக்க மாட்டார்.

ஒவ்வொரு அகதியின் வாழ்விலும் எத்தனையோ சொல்லொணாத் துன்பங்களும், துயரங்களும் அடங்கியிருக்கின்றது. அத்துயரங்கள் எமக்குப் புரிய மாட்டாது. நானும் மத்தியதர குடும்பத்தைச் சார்ந்தவன். எனது அறிவிற்கும் அனுபவத்திற்கும் எட்டியவரையில் இக்கட்டுரை எழுதப்பட்ட விதம் மிகவும் பிழையானது. அச்சீர்கேடுகளை மாற்ற வேண்டியது நாமேதான். அப்பிழைகளும் எம்முடையதே.

பிரபாகரனின் கொள்கைக்கு முரணானது. பிரபாகரன் என்ற சொல் இன்று ஒரு தனிமனிதனின் பெயர் அல்ல. அப்பெயருக்கு பல பொருள் உண்டு. பல அர்த்தங்கள் உண்டு.

நாம் அதே மனிதரோடு சமகாலத்தில் வாழ்வதால் இவற்றை சரியாகப் புரிந்து கொள்ளாமல் விடலாம்.

பிரபாகரன் என்றால் Symbol of Freedom என்றும் சிலர் கூறுகிறார்கள்.

இன்னும் எளிமை, மனிதநேயம், அன்பு, ஆளுமை, தலைமை முக்கியமாக மக்களை நேசித்தால் எப்போதும் ஏழைகளையும் நேசிப்பது அவர்களுக்காகவே சிந்திப்பது இவைதான், 'பிரபாகரன்' என்றால் அர்த்தமாகிறது. இவை ஒரு தத்துவம். எமக்கு வழிகாட்டும் சத்தியபோதனை. இவற்றைத்தான் எமது இயக்கமும் விடுதலைப் போராட்டமும் இலட்சியமாகக் கொண்டுள்ளது.

நானும் 18 வயதில் பள்ளிக்கூட படிப்பை இடையிலே கைவிட்டு பின் இன்றுவரை இவ்வழிநடத்தலிலே இப்போதனைகளையும், தத்துவங்களையும் படித்துத்தான் வளர்ந்தேன். இதை வைத்துத் தான் சிந்திக்கவும் பழகினோம். இப்படியான காலகட்டத்தில் மேலேழுந்த விதமாக சனங்களைப்பற்றி இப்படி எழுதுவது சரியல்ல"

எவ்வளவு ஆழமான கருத்துக்கள். எமது தலைவரைப்பற்றியும், மக்களைப்பற்றியும் கிட்டண்ணா எவ்வளவு தெளிவாக தீர்க்கமாக கூறியிருக்கிறார்.

கிட்டண்ணா வெளிநாட்டுக்குப் போன பின்பு, அங்கு நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. இதுவரை காலமும் போராட்டத்தில் இருந்து ஒதுங்கியிருந்த புத்திஜீவிகள், மாணவர்கள், வேலை பார்ப்பவர்கள், அகதிகள் எனப் பலதரப்பட்டவர்களை அவர் அரவணைத்துக் கொண்டார். ஒவ்வொரு தமிழனுக்கும் தாயகத்தின் விடுதலைக்கான கடமையினை, பங்களிப்பினை அவரது அன்பாலும், ஆளுமையினாலும் உணரச் செய்தார். விடுதலைப் புலிகளது வெளிநாட்டுக் கிளைகளின் செயற்பாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் "தமிழர் ஒருங்கிணைப்புக்குழு" எனும் அமைப்பை ஆரம்பித்து வைத்தார். இவை மாத்திரமல்லாமல் விடுதலைப் புலிகளின் எல்லாக் கிளை அமைப்புக்களையும் அந்தந்த நாடுகளில் பதிவு செய்து அந்தந்த நாடுகளின் சட்ட ஒழுங்கிற்கு (Law and Order) மதிப்புக் கொடுத்து அதற்கு அமையவே வேலைத் திட்டங்களை அமைத்துக் கொடுத்தார். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் போன்ற பல உப அமைப்புக்களையும் பல்வேறு நாடுகளில் நிறுவினார். கலை பண்பாட்டுக் கழகம் வெளிநாடுகளில் ஏராளமான இசை நிகழ்ச்சிகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது. வெளிநாட்டுத் தமிழரிடம் மாத்திரமல்லாமல் வெளிநாட்டவர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை இந்நிகழ்ச்சிகள் பெற்றுள்ளன. அண்மையில் சுவிஸ் நாட்டில் கலை பண்பாட்டுக் கழகம் தயாரித்து மேடையேற்றிய நாடகம் ஒன்று ஐரோப்பாவில் நடந்த நாடகப் போட்டிகளில் (பல்வேறு மொழிகளில்) முதலாவது பரிசைத் தட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கதாகும். வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களிடையே எமது பண்பாடுகளை விடாப்பிடியாகப் பேணுவதற்கும், வெளிநாட்டவர் மத்தியில் எமது பண்பாட்டின் விழுமியங்களை உணர்த்துவதற்கும் கலை பண்பாட்டுக் கழகம் பாடுபட்டு வருகிறது. இதேபோலவே விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும், சிறுவர்களுக்கான தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்தல், தமிழ் இளைஞர்கள் மத்தியில் மெய்வல்லுனர் போட்டிகளும், உதைபந்தாட்டப் போட்டிகளுமான நிறைய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர். பொருண்மிய மேம்பாட்டுக் கழக வெளிநாட்டுக் கழக வெளிநாட்டுக் கிளையினரும் தமிழீழ வளங்கள் குறித்தான பல ஆய்வுகளை மேற்கொள்ளுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள். எல்லாவற்றிற்கும் மூலபலமாக நின்றவர் கிட்டண்ணா என்றால் மிகையாகாது.

சுவிற்சலாந்து நாட்டில் "ஈழநாதம்" எனும் உள்ளூர் வானொலி சேவையினையும், கனடாவில் மொன்றியல், ரொரன்றோ ஆகிய நகரங்களிலும் உள்ளூர் வானொலி சேவையினையும் ஆரம்பித்து அங்குள்ள மக்களுக்கு விடுதலை உணர்வைப் பரப்பினார். வளர்ந்துவரும் நவீன உலகில் சிறந்த பிரச்சார உத்தியாக ஒளிப்பதிவு நாடாத் திகழ்வதை அவதானித்த கிட்டண்ணா இதனை நன்கு பயன்படுத்தினார். தமிழீழத்தில் "நிதர்சனம்" என்ற புலிகளின் தொலைக்காட்சி சேவையினை ஆரம்பித்தது போன்று வெளிநாட்டுத் தமிழர்களுக்காக "தரிசனம்" என்ற வீடியோ சஞ்சிகையினை மாதம் தோறும் பிரான்ஸிலிருந்து வெளிவரச் செய்தார்.

கிட்டண்ணா வெளிநாட்டில் இருந்தாலும் அவரது மனம், எண்ணங்கள் சிந்தனைகள் எல்லாமே, தமிழீழத்தைப் பற்றியதாகவே அமைந்தது. தமிழீழத்திலுள்ள வளங்கள், கலைபண்பாடுகள், அரசியல் செயற்பாடுகள், சமூகப் பணிகள், இராணுவக் கட்டமைப்புக்கள், பயிற்சி முறைகள், புகைப்படக் கலை போன்ற பல துறைகளைப் பற்றிய தனது எண்ணங்களை, அனுபவ ரீதியாகத் தான் பெற்றுக் கொண்டவற்றை, அறிவு பூர்வமாக தான் அறிந்தவற்றை விளக்கமாக சிறுசிறு குறிப்புகளாக பல மடல்களை எழுதினார். தலைவரைப் பற்றி அவர் பூரணமாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார். ஒரு இடத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"வெளிநாடுகளில் வாழும் மக்கள் எமது தலைவரின் மீது அதிகமான நம்பிக்கையையும், உறுதியையும் கொண்டுள்ளனர். சில இடங்களில் இயக்கத்தை நம்பாவிட்டாலும் தலைவரை நம்புகின்றனர். இப்படியாக எமது தலைவர் தனிப்பெருந்தலைவர் என்றுதான் மக்களால் கணிக்கப்படுகின்றது. "

தொடர்ச்சி 11ம் பக்கம் ....